பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a Newspaper in Sri Lanka.

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 21 திங்கட்கிழமை (5-03-2001) தொலைபேசி: 3378 ஒலி: 75

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1539)

## விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போர்த் தந்திரங்கள் தெரிந்த சிறந்த வீரன்

### பிரித்தானிய புலனாய்வுத்துறை அதிகாரி கருத்து

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் போர்த்தந்திரங்களை நன்கறிந்த சிறந்தவொரு வீரன். அவருக்கு தனது விடுதலை அமைப்பை எவ்வாறு பலப்படுத்த வேண்டுமோ, அவ்வாறு பலப்படுத்தும் சிறந்த அறிவுண்டென பிரித்தானிய புலனாய்வுத்துறை அதிகாரி மைக்டொல்மோறோ தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை பிரித்தானியாவில் கட்டுப்படுத்துதல் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மைக்டொல்மோறோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகள் தமது ஆயுதபலத்தைஇழக்கவில்லை ஆயுதரீதியாக அவர்கள் மிகவும் பலமான நிலையில் உள்ளார்கள். பிரித்தானியா அரசு விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ளபோதிலும் புலிகள் என்ன நிலையில் உள்ளனரென்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் அரசும் விடுதலைப் புலிளும்க பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். [இ

## லண்டனில் குண்டுத் தாக்குதல்

[லண்டன்]

லண்டன்பிபிசிதொலைக் காட்சி ஒளிபரப்பு சேவை நிலையத்திற்கு அருகே நேற்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் நாலுபேர் பலியானதுடன் 40பேர் காயமடைந்துள்ளனர்.

## அமெரிக்க தூதுவர் நாளை வருவார்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டு நிலமைகளைநேரில் கண்டறிவதற்கு

→ 8ஆம் பக்கம் பார்க்க

★ புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இறுதி வடிவம்

# புலிகளைத் தடைசெய்த பின்னர் கதிர்காமர் - எரிக்சோல் சந்திப்பு!

## சந்திரிகா, ரணிலையும் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும், நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

கொழும்பு வந்துசேர்ந்துள்ள தூதுவர் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை நேற்று மாலை சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டன்தடைசெய்ததன்பின்பு முதல் தடவையாக நேற்று முன்தினம் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம்கொழும்பு வந்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக விடுதலைப் புலிகள் மூன்றாவது தடவையாக யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்திருக்கும் வேளையிலும் – புலிகளை பிரிட்டன் தடை செய்திருக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தலைவர்களுக்கு தூதரகம் அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ளநோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மைச் சந்திப்பதற்கு பத்துத்தமிழ்க் கட்சிகளும்நோர்வே தூதரகத்திடம்அனுமதிகேட்டபோதும் தூதரகம் அதனை மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது

தமிழ்க்கட்சிகளுக்கு மறுப்புத்தெரிவித்தமை தொடர்பாக தூதரக வட்டாரம் கருத்து தெரிவிக்கையில் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் ஒரு முக்கிய குறுகிய காலகுறிக்கோளுடன் குறுகியகால விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருப்பதினால் அதற்கு முட்டுக்கட்டையோ காலதாமதமோ ஏற்படாமல் இருப்பதற்காகவே தூதுவரை சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளன. (வ

## மண்ணையும் மக்களையும் நம்பியே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது

### சு. ப. தமிழ்ச் செல்வன் உரை

(வவுனியா)

எமது தேசத்தின் மீதுசுமத்தப்பட்டுள்ளபோரின் விளைவாக சொல்லொண்ணாத துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வுகளையும், ஆறுதல்களையும் விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும், உணர்த்துவதில் தெருவழி நாடகங்கள் பெரும் பங்காற்றிவருகின்றன

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர், சு.ப.தமிழ்ச்செல்வன் வன்னியில் இடம்பெற்ற வைபவம்ஒன்றில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்குஅவர்மேலும் பேசுகையில் அரசின் பொருளாதாரத் தடை இறுக்கப்பட்டு எரிபொருள், வாகனவசதிகள்இல்லாத நிலையில நாடகங்களை நடாத்த முடியாத இக்கட்டானநிலையில் அதனை நிவர்த்தி செய்வது தெருவழி நாடகங்களாகும்.

எத்தகைய நெருக்கடிகள் வந்தாலும் தமிழ் மக்கள் நிமிர்ந்து நிற்கக் கூடியவர்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது:

எமது தலைவர் பிரபாகரன்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதலைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

அர்ச்சுனாவின்ஆதரவாளர்கள் நடத்திய

[கொழும்பு]

இலங்கையின் முன்னாள் கிரிக்கெற் அணியின் தலைவர் அர்ச்சுணரணதுங்காவின் ஆதரவாளர்களினால் அசோகா வித்தியாலய மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்தினார்கள்.

அசோகா வித்தியாலய மாணவர்கள் விளையாடும்போது அவர்கள் அடித்த பந்து அருச்சுணரணதுங்கா வீட்டில் விழுந்ததை அடுத்தே இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தை கண்டித்து மாணவர்கள் கொழும்பு சுகததாஸவிளையாட்டரங்கில் இருந்து ஆர்ப்பாட்டபேரணி ஒன்றை ஆரம்பித்து மருதானைப் பொலிஸ் நிலையம்வரை நடத்தினார்கள் (வ

## சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியை அரசு கைவிடவில்லை

### ஸ்ரீ. சு. கட்சி மாநாட்டில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளைஇன்னமும் அரசுகைவிடவில்லையென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்:

கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 ஆவது தேசிய மகாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்:

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான தடை 10 தமிழ்க்கட்சிகளும் இன்று கூடி ஆராய்வு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளைபிரித்தானியஅரசுதடை செய்திருப்பதை அடுத்துஎழுந்துள்ள அரசியல் நிலமைகள் தொடர்பாக பத்துத் தமிழ்க் கட்சிகளைச்சேர்ந்த தலைவர்கள் இன்று கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர்.

தமிழ் தலைவர்களின் இச் சந்திப்பின் போது தமிழீழவிடுதலைப்புலிகளை தடைசெய்திருப்பதால் ஏற்பட்டுள்ள அரசியல்நிலமைகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். (ம

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வேண்டுதல்

புலோலி புற்றளைமகாவித்தியாலயம் மாணவர்களின் உடல்நலத்துறையை பேண விளையாட்டு மைதானம் மிக அத்தியாவசியமாகின்றது. பொது நலம் பேணும் நல்மனம் கொண்ட எம் ஊரவர் பெரு விருப்புடன் புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள விளையாட்டு மைதானமாக பாவிக்கப்படுகின்ற நிலப்பரப்பை ஒருமித்து நன்கொடையாக அன்பளிப்பு செய்து பாடசாலை மாணவர்களும், ஊர் இளைஞர்களும் பயன்படும் வகையில் உதவ தாழ்மையான வேண்டுதல் விடுக்கிறோம்.

ஆகவே மேற்படி மைதானத்தின் நிலச்சொந்தக்காரர்களை தொடர்புடைய உறுதிகள், அளப்பனவு படம் ஆகிய ஆவணங்களுடன் புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகிறது.

நன்றி

வ. செல்வராசன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
புற்றளை மகாவித்தியாலயம்
புலோலி.

(கி-1558)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'விவசாய நோக்கு' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனமண்டபத்தில் இடம்பெற உள்ளது.

மாணவர் மன்ற தலைவர் இ. செந்தூர்ச்செல்வன் தலைமையில் இடம் பெறும் மேற்படி நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக பொருளியல் விவசாய பீட துறைத்தலைவர் விஜயரட்ணம கலந்து கொள்கின்றார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் எஸ். சதாசிவமூர்த்தி ஆய்வுரை நிகழ்த்துவார்.

கலை நிகழ்வுகள் மற்றும் அறிஞர்களின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன. (க

# கணனிப் பயிற்றுநர்
## Computer Instructor

உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கணனிக் கல்வி ஊட்டக்கூடிய தகைமை பெற்றவர், பயிற்றுநராகத் தெரிவு செய்யப்பட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நேரில் தோற்றும் போது விபரங்கள் பெறப்பட்டு தகுதியானவர்தெரிவு செய்யப்படுவர். 20-03-2001 க்கு முன்னதாக, செயலாளர், ஹாட்லிகல்லூரி, பழைய மாணவர் மன்றம், பருத்தித்துறை என்ற முகவரியில் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

இணைச் செயலாளர்
பழைய மாணவர் மன்றம்
ஹாட்லி கல்லூரி
பருத்தித்துறை.

(கி-1557)

## நாளை

செல்லையா மெற்றாஸ்மயில் எழுதிய

### "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்"

(வெடியரசன்/ சங்கிலியன்/ பூதத்தம்பி வசனநாடகங்கள்)

# நூல் வெளியீட்டு விழா

இடம்: யா. இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.
காலம்: 06.03.2001 மு.ப.10 00மணி
பி.ப. 1.30 வரை

தலைவர்: வைத்திய கலாநிதி வை. தியாகராசா J.P.
(தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)

### நிகழ்ச்சி நிரல்

(மு. ப)
10 00 மங்கள விளக்கேற்றல்
10.05 மௌன வணக்கம்
10.08 வரவேற்பு பா மதுரகவி காரை எம்.பி அருளானந்தம்
10.12 தலைமையுரை
10 20 ஆசியுரை ★ பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்
★ ஆகமகிரியாஜோதி சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவககுருக்கள்
10.35 வாழ்த்துரை
★ உயர்திரு க.சண்முகநாதன் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.
★ உயர்திரு து.வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர்)
★ பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உபவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்.
★ உயர்திரு மு. திருநாவுக்கரசு பதில் மாவட்ட நீதிபதி யாழ்ப்பாணம்.
★ உயர்திரு ப. விக்னேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்
★ கலாநிதி சு. சிவலிங்கராசா தலைவர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்.
11.10 வெளியீட்டுரை செங்கையாழியான் - கலாநிதி க. குணராசா
11.20 பிரதிகள் வழங்கல்
11.40 கருத்துரை திரு சி. தார்சீசியஸ் முன்னாள் அதிபர்
11.45 நூலிலிருந்து பாடல் திரு நா. விமலநாதன், ஆசிரியர் யா/இ. கல்லூரி
11.50 ஆய்வுரை ★ கவிஞர் சோ. பத்மநாதன் (மேலதிக மாகாண கல்வித்திணைக்களம்)
★ திரு ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரியர் (செயலாளர் நாயகம், திருமறைக் கலாமன்றம்)
12.10 நூலிலிருந்து பாடல்
நடிககலாமணி வ. செல்வரத்தினம் (செல்வம்)
திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கம் சங்கீத ஆசிரியை
திரு. யஸ்ரின் தைரியநாதன்
12.20 நாடகம்
நூலிலிருந்து சங்கிலியன் நாடகத்தில் ஒரு அங்கம்

#### நடிகர்கள்

காத்தவராயன் புகழ் பொ. அருந்தவநாதன் ஆசிரியர்
கலாபூஷணம் 'கலைமகிழ்னன்' வே. க. பாலசிங்கம்
கலையரசன் மா சீவரத்தினம் (ஜீவா)
திரு. யஸ்ரின் தைரியநாதன், திரு. வ. தயாநிதி ஆசிரியர்
12 50 பதிலுரை நூலாசிரியர் செல்லையா மெற்றாஸ் மயில்
1.00 நன்றியுரை திரு. வ. சி. செல்வராசா
செயலாளர் (பா. க. மே. கழகம்)

#### பிரதி பெறுபவர்கள்

முதற் பிரதி: திரு. சி. தார்சீசியஸ் முன்னாள் அதிபர் (O.L.R)
இரண்டாம் பிரதி: திரு. சோ. தில்லைநாதன் கோட்டக்கல்வி அதிகாரி வேலணை.
மூன்றாம் பிரதி: பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைவர் புவியியல் துறை யாழ். பல்கலைக்கழகம்.

#### சிறப்புப்பிரதிகள் பெறுபவர்கள்

சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள், அரசடிப்பிள்ளையார் தேவஸ்தானம் நாயன்மார்கட்டு.
திரு. க. இராஜதுரை அதிபர் மத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.
திரு. சரா. புவனேஸ்வரன், இயக்குனர் சயன்ஸ்அக்கடமி, யாழ்ப்பாணம்
பேராசிரியர் கா. குகபாலன். புவியியல்துறை, யாழ்ப்பாணம்.
திரு. க. கனகரத்தினம். நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம்.
திரு. கு. சிவபாலன் பொறியியலாளர், மேலதிகமாகாண கல்வித்திணைக்களம்.
திருமதி யோ. சிவப்பிரகாசம். முகாமையாளர் மக்கள்வங்கி, கன்னாதிட்டி
திரு. க. பாலச்சந்திரன், முகாமையாளர், மக்கள்வங்கி யாழ். பிரதானவீதி,
திரு. B. P. பாஸ்கரன், இயக்குனர். எடிசன் அக்கடமி யாழ்ப்பாணம்
திரு. வா. தவச்செல்வம் J. P கந்தர்மடம் யாழ்ப்பாணம்
திரு. ம. பற்றிக்டிறஞ்சன் ஆசிரியர் யா/இந்துக்கல்லூரி
திரு. க. வை. சுந்தரராஜா முன்னாள் தொலைத்தொடர்பு பரிசோதகர் 'கமலவாசா' சித்தன்கேணி
திரு. பா. சிவபாலன்-பிரதம எழுதுனர்-யாழ். வலயக்கல்வித்திணைக்களம்.
தென்இந்தியத்திருச்சபை. ஆதீனம்
திரு. சு. திசநாயகம்பிள்ளை J. P தலைவர். வேலணை ப. நோ. கூ. சங்கம்.
டாக்டர். ரெஜி சொலமன், லாவண்யா கண்ணாடி அகம், 552, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
திரு. த. சத்தியதாசன். தலைவர். ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.
திரு. நா. சங்கரப்பிள்ளை. தலைவர் நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்
நடிககலைமணி வ. செல்வரத்தினம் (செல்வம்)
வைத்திய கலாநிதி எஸ். இராசேஸ்வரி, ஈஸ்வரி ஹோமியோபதி மெடிக்கல் கிளினிக்-பருத்தித்துறை வீதி, நல்லூர்
திரு. V. J கொன்ஸ்ரன்ரைன் இயக்குனர் புதிய கலாசார கவுன்சில் 28/1 சென்ஜேம்ஸ் மேற்குவீதி, யாழ்ப்பாணம்
திரு. ந. தவசோதிநாதன் ஆசிரியர். வங்கியடி இணுவில்கிழக்கு
திரு. நடராசா இராசரட்ணம் பேபிபோட்டோ, பலாலிறோட், திருநெல்வேலி
திரு. குயின்ரஸ் திருஞானம் (S. L E A. S) விரிவுரையாளர், பலாலிஆசிரியர் கலாசாலை
திரு. வ. தில்லைநடராஜா கிராமசேவையாளர், சங்கானை. 40/1 வைமன்றோட் யாழ்ப்பாணம்
திரு. ஆ. சந்திரன், உரிமையாளர் சந்திரா கச்சான்அல்வா தொழிற்சாலை, நாவலர் றோட் யாழ்ப்பாணம்.
திரு. எல். கெங்காதரன், உரிமையாளர். கெங்கா உலோகக்கவையம் K.K.S. றோட் யாழ்ப்பாணம்.
திரு. இ நந்தகோபால், மில்க்வைற் தொழிற்சாலை
திரு. ஆ. மகாதேவன் (S. L. E. A. S) விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
இலங்கைவேந்தன்-ஆசிரியர் சென்ஜேம்ஸ் ம. வி. யாழ்ப்பாணம்
திரு. சி. யசோதரன்-ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி
திரு. ச. கிருபானந்தன்-ஆசிரியர் அருணோதயாக்கல்லூரி அளவெட்டி
திரு. க. வேலாயுதம்-ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி
திரு. செ. வசந்தகுமார், கிராமசேவையாளர், உரும்பிராய் தெற்கு.
திரு. ந. நேசக்குமார்-உரிமையாளர் மாரிமுத்து கட்டடத் தொழில்நுட்பக்கூடம் 13/2 துரைராஜவீதி, யாழ்ப்பாணம்
திரு. இ. சிவலிங்கம் உரிமையாளர் ரட்ணாமோட்டஸ் ஸ்ரான்லிவீதி, யாழ்.
லயன் A. ஜெயக்குமாரன் உரிமையாளர். P. J. பெர்னாண்டோ கண்ணாடி அகம் யாழ்ப்பாணம்
திரு. எம். வேலாயுதபிள்ளை-ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி
திரு. ப. திருஞானசம்பந்தன்-ஆசிரியர் யாழ். மத்தியகல்லூரி
திரு. சி. பாலசுந்தரம்-கிராமசேவையாளர், 159 மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம்
திரு. ம. செல்வம்-உரிமையாளர், ஸ்ரீ சாயி துர்க்கா நகையகம், கஸ்தூரியார்றோட் யாழ்ப்பாணம்,
திரு. A. பிரசாத் 'கிருஸ்ணாஸ்' 9, ஆறாம் ஒழுங்கை, பலாலிவீதி, கந்தர்மடம்.
திரு. ச. பாலசுந்தரம், 20 சுண்டிக்குளி வீதி, யாழ்ப்பாணம்.

**நூலாசிரியரின் பல நண்பர்கள், ஆதரவாளர்களின் முகவரிகள்தெரியாததினால் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளவும்.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூலின் விலை: 200/-

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்

வாழ்த்துகின்றோம்
**மெடிஎயிட்ஸ்**
நிறுவனம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**லலிதாஸ்**
அழகுமாடம்
24/21, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**விஜிதா கபே**
247, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1560)

# சங்கேமுழங்கு

## ஏழைமக்களின் பரிதவிப்பு

தென்மராட்சி மேற்கு மீள் குடியேற்றத்தில் இரண்டும் கெட்ட நிலை காணப்படுகிறது. விவசாயம் செய்தும் கூலி வேலை செய்தும் வாழ்ந்த ஏழை மக்கள் தாங்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்த பகுதிகளில் நிலை கொள்ள முடியாமல் பரிதவிக்கிறார்கள். தென்னை, பனை, வாழை, மா, பலா, தோட்ட வருவாய் என்பவற்றை நம்பி வாழ்ந்த விவசாயிகளும், தோட்டவேலை, சிறு கைத்தொழில்கள், சில்லறைக் கடைகள், வாடகை வாகனங்கள் என்பவற்றை நம்பி வாழ்ந்த தொழிலாளர்களும் தற்போதைய சூழ்நிலையில் மீண்டும் தத்தமது வீடுகளுக்குத் திரும்ப ஆர்வம் இருந்தும் தொழில் வாய்ப்பு இன்மை, பிள்ளைகளுக்கான கல்வி வசதி, மருத்துவ வசதிகள் என்பவற்றை சிறப்பான முறையில் அமைத்துக் கொள்ள முடியாமல் பரிதவிக்கின்றனர். இவர்களுக்கு இவற்றை அமைப்பதற்குரிய வழிவகைகளும் சரியாகத் தெரியாது

இப்பிரதேசத்தை தமது பாரம்பரிய பிரதேசமாகக் கொண்ட புத்திஜீவிகள் சமூகத்தின் குறைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்பது நன்கு தெரிந்திருந்தும் அவற்றைத் தெரியாதவர்கள் போல நடந்து வருகின்றனர் கல்வியைப் பொறுத்தவரை உறுதியான நடவடிக்கையொன்று எடுக்கப்படாதவரை மக்கள் சமூகம் இடப்பெயர்வை விட்டு வீடு திரும்புவது எதிர்பார்க்க முடியாதது. தத்தமது பிரதேசங்களில் சிறிய அளவிலாவது கல்வி வசதி ஏற்படுத்தப்பட்டால் அது பலரது வாழ்வுக்கு நலம் சேர்ப்பதாகும். உயர் வகுப்புக்களைப் பொறுத்தவரை கல்வி கற்பதற்கு யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமப் பகுதிகளுக்கு சென்று வருவதற்கு ஏற்ற போக்குவரத்து வசதி உடனடியாகத் தேவை. இவை ஏற்பட வேண்டும் என்றே தென்மராட்சி மேற்கு சமூகம் உடனடியாக எதிர்பார்க்கிறது

சி. ஜெயகணேஷன் (ஆசிரியர்)

# சமாதானம் ஏற்படுத்தும் நோக்கில் அமைச்சர் ஒருவர் வன்னி பயணம்

(கொழும்பு)

இலங்கையில் இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் பணியில் அண்மைக் காலமாக மிகவும் தீவிரமான செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அமைச்சர் ஒருவர் வெகு விரைவில் வன்னிக்குச் செல்லவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

இவ் அமைச்சரின் பெயர் ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும்,

விடுதலைப் புலிகளின் அனுமதி கிடைத்ததும் அமைச்சர் வன்னிக்குச் செல்வார் என்றும் தெரியவருகிறது.

நோர்வேயின் சமாதான முயற்சியில் முக்கிய திருப்பங்கள் ஏற்படக் கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளதால் அமைச்சரின் வன்னி விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனக்கருதப்படுகின்றது.

விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டின், அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் வன்னிக்கு வருகை தரவேண்டும் என அவர்களால் நிபந்தனை விதிக்கப்பட்டது.

சர்வமதக் குழுவினரின் வன்னி விஜயத்தின் பின்னர் தென்னிலங்கைப் பகுதியில் சில சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதனையடுத்தே அமைச்சர் வன்னி செல்லவுள்ளார்.

இவ் அமைச்சரின் வன்னி விஜயத்தின் மூலம் அமைதியான நிலை ஏற்பட இடமுண்டு எனவும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். [செ]

# பாதுகாப்பின் மத்தியில் ஸ்ரீ. ல. சு. கட்சி மாநாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 வது தேசிய மாநாடு நேற்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் பழைய குதிரைப்பந்தய திடலில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டிருந்தது.

இம் மாநாட்டுக்காக, சுதந்திர சதுக்கம், றேட் அவனியூ, ராஜகிரிய மாவத்தை, கிரான்ட்பாஸ் மேக்லன்ட் பிளேஸ், எச். ஆர். செனநாயக்க மாவத்த, ஸ்ரான்லி வியசுந்தர மாவத்த ஆகிய போக்குவரத்துப் பாதைகள் பாதுகாப்பு கருதி மூடப்பட்டதாக கொழும்பு போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் அல்பிரட் விஜயவர்த்தனா தெரிவித்துள்ளார். (க-08-07)

## இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மணல்த்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஆயுள்வேதவைத்தியசாலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஆயுள் வேத திணைக்களம் இவ் வைத்தியசாலை அமைப்புக்கென 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

# உடுவில் சங்கானையில் தொடரும் திருட்டுக்கள்

(யாழ்ப்பாணம)

உடுவில், சங்கானை, சித்தன்கேணிப் பகுதிகளில் தொடரும் திருட்டு நடவடிக்கைகளால் அப் பகுதி வாழ் பொதுமக்கள் உளரீதியில் பெருமளவு பாதிப்படைந்துள்ளனர்.

இது விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ உயர்அதிகாரிகள், அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக இப் பகுதி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; யாழ்ப்பாணத்தில் அமைதி நிலை ஏற்படுவதற்கு பொது மக்கள் உடைமைகள் பாதுகாக்கப்படுவது மிக் முக்கிய மாகும்.

தொடரும் திருட்டுக்களால் பொதுமக்கள் இரவில் நிம்மதியாக நித்திரை செய்ய முடியாதுள்ளது.

பாரிய இடப்பெயர்வின் பின் பொது மக்கள் சொத்துக்கள் பெருமளவு இழந்த நிலையில், அவர்களது எஞ்சிய சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டியதும் அவசிய மாகும்.

இது விடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும். (க)

# புத்தகங்கள் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான என மதனராஜா வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தின் நூலகத்திற்குப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இப்பாடசாலையில் புதிதாக நவீன வசதிகளுடன் நவீன முறையில் அமைக்கப்பட்ட நூலகத்திறப்பு விழாவின போதே நூலகத்தினைத் திறந்து வைத்ததுடன நூலகளினையும அன்பளிப்பு செய்தார்.

இத்திறப்புவிழா நிகழ்வு பாடசாலையின் அதிபர் கு.சரவணபவானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு தீவக வலய கலவிப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், யாழ் பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு.ஜே. எக்ஸ்.செல்வநாயகம், வேலணைப் பிரதேச சபைத்தலைவர் என்.கருணாகரகுருமூர்த்திஆகியோருடன் இன்னும்பல பிரமுகர்கள, பழைய மாணவர்கள, நலன்விருமபிகள் என பலரும கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். (க-75)

# தடகள விளையாட்டு போட்டி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 5ஆம் 6 ஆம் திகதிகளில்குடத்தனை பொற்பதி பகுதியில் இடம் பெறவுள்ளது. (க-43)

# உரிமத்தகடு வழங்கல்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைப்பகுதியில் துவிச்சக்கரவண்டிகள், மாட்டு வண்டில்கள், வளர்ப்பு நாய்கள் என்பவற்றுக்கான உரிமத்தகடுகள் வலி. தென்மேற்கு பிரதேசசபையின் உப அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. (செ-125)

# யாழ். பிரதேச செயலரின் அன்பான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு இன்றைக்கு பல வருடங்களாகியும் இவ்வலுவலகம் தனியார் வீடுகளிலேயே மாறி மாறி இயங்கி வருகின்றது. இவ்வலுவலகத்திற்கு சொந்தமான காணியோ கட்டிடமோ கிடையாது. தற்போது உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டு அவற்றின் பணிகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

அந்தவகையில் யாழ் பிரதேச செயலகம் தற்பொழுதும் எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற வாடகை வீட்டிலேயே இயங்கி வருகின்றது. இதனால் இவ்வலுவலகத்திற்கு தமது தேவைகளைப் பெறும் நோக்கில் வரும் மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள். பொதுமக்கள் இங்கு வந்து தரித்து நிற்பதற்கான இடவசதியோ ஏனைய வசதிகளோ கிடையாது. அத்தோடு அலுவலர்கள் தமது கடமைகளைச் செவ்வனே செய்வதற்கான சூழலோ ஆவணங்களைப் பாதுகாப்பதற்கான வசதிகளோ, குடிநீர், மலசலகூட வசதிகளோ ஏனைய அடிப்படை வசதிகளோ இன்றி மிகவும் கஷ்டத்தின் மத்தியில் கடமையாற்றுகின்றார்கள்.

பொதுமக்கள், அலுவலர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் இப்பிரதேச செயலகத்திற்கான நிரந்தர கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கம், கட்டடம் அமைப்பதற்கான நிதியினை வழங்கத் தயாராக இருக்கின்றது. ஆனால் அமைக்கப்படும் கட்டடம் அரச காணியிலோ அல்லது அரசாங்கத்திற்கு பொதுமக்களால் அன்பளிப்புக்கள் செய்யப்பட்ட காணியிலோ தான் அமைத்தல் வேண்டும் என்பது அரச கொள்கையாகும்.

இந்த வகையில் யாழ் பிரதேச செயலர் பிரிவில் அரசாங்கத்திற்கு சொந்தமான காணியைப்பெற முடியாத நிலையில் உள்ளது. அத்தோடு இப் பிரதேசத்தின் காணியின் முக்கியத்துவம் அவற்றின் பயன்பாடு கருதித் தனிப்பட்டவர்களும் காணியை அன்பளிப்புச் செய்ய முன்வரவில்லை. இக்காரணத்தினால் இப் பிரதேசத்திற்கான நிரந்தர பிரதேச செயலக கட்டிடத்தை அமைக்க முடியாத துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு பிரதேச செயலகத்திற்கான காணி ஒன்றினை கொள்வனவு செய்யும் நோக்கில் இப்பிரதேசத்தில் வாழும் பொதுமக்கள் நலன்விரும்பிகள், பொது அமைப்புக்கள் என்பவற்றிடமிருந்து நன்கொடையினைப் பெற்று காணியொன்றினை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இப் பிரதேசத்தின் வளர்ச்சியினையும் தேவையினையும் கருத்திற் கொண்டு தங்களால் இயன்றளவு நன்கொடையினை மனமுவந்து வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 06 ↓ 03 ↓ 1907



சிவபதம் 03 ↓ 02 ↓ 2001

திருமதி
**தம்பையா அன்னப்பிள்ளை**

தொண்ணூறொடு நான்கு ஆண்டு நிறைவான
வாழ்வு வாழ்ந்து
மண்ணகம் மெய்ச்ச மகிழ்வுடன்
வாழ்வாங்கு வாழ்ந்து
விண்ணுல கடைந்த எங்கள் அன்பு
தெய்வத்தை வணங்குகின்றோம்.

நன்றி.

திரு திருமதி. சிவகுரு ஞானப்பூங்கோதை
திரு திருமதி கணேசபிள்ளை
திரு திருமதி. சொக்கலிங்கம்
திரு திருமதி பராபரம்
திரு திருமதி சத்தியமூர்த்தி

சத்திய கிரி,
இணுவில் தெற்கு.
இணுவில்:

(கி/1561)

# செய்தித் துளிகள்

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்துதமிழ்க் கலவன்பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு அருகிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஜெயானந்தன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு ஜீ.ரீ. சற் நிறுவன பொறியியலாளர் யோ. தயாபரன்பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் யாழ். இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (செ-9)

## வெடிபொருள் மீட்பு

(கொழும்பு)

வவுனியாவில்உள்ளஆசைக்குளப் பகுதியில் கடந்த2ஆம் திகதியன்று 10 கிலோ வெடிபொருளினை படையினர் கைப்பற்றியுள்ளார்கள் என விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## தலைவர் மரணம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க பொது சிற்றூழியர் சங்கத்தலைவர் எஸ் .ஜே. லூக்காஸ் கடந்த புதன் கிழமைஇரவுதிருகோணமலையில் இடம் பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் பலியானார். (உ)

## கிராம அலுவலர்க்கு பயிற்சி

[யாழ்ப்பாணம்]

குடிசன மதிப்பீட்டுக் கணக்கெடுப்பு சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் கிராம அலுவலர்களுக்கு இம்மாதம் வழங்கப்படவுள்ளன.

கடந்த இரு தசாப்தங்களாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் குடிசன மதிப்பீடு நடைபெறவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (உ-)

## விபத்து

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு சந்தியில் உள்ள வெதுப்பகம் ஒன்றின் முன் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்து மேற்படி வெதுப்பகத்திற்குள் லாண்ட் மாஸ்ரர் புகுந்ததில் அங்கிருந்த உணவுப் பொருட்கள் கண்ணாடி அலுமாரிகள் என்பன சேதமடைந்துள்ளன. [உ-49]

## நூல்கள் இரவல் வழங்கல்

[இணுவில்]

உடுவில் மத்திய சனசமூக நிலையத்தில் நூல்கள் இரவல் கொடுக்கும்பகுதிஅண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மாணவர் மற்றும் பொது மக்கள் நன்மை கருதியே இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதாக நூலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க-49]

## வீதி துப்பரவு

(மண்டைதீவு)

திருநெல்வேலி பணிக்கர் வளவு மைதானவீதியை புனரமைப்பு செய்வதற்கு முன்னோடியாக அவ்வீதி துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

நல்லூர் பிரதேச சபை இந் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (உ-11)

## மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

யா/மத்திய கல்லூரி மாணவன் த. ஆதீதன் (வயது 18) கிரிக்கெட் போட்டியின்போது வீழ்ந்து கையில் காயமடைந்த நிலையில் யா/போதனா வைத்தியசாலையில் சிகிச்சையின் பொருட்டு அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ-க-6)

## அங்குரார்ப்பண கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குரிய இளைஞர் சேவைமன்ற அங்குரார்ப்பணக்கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் கிராம அலுவலர் எஸ். தயாபரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இளைஞர் சேவை மன்ற உத்தியோகஸ்தர் கோகுலராஜன் முன்னிலையில் மன்ற தலைவராக சி. சேரரூபன், செயலாளராக செல்வி சி. சசிகலா பொருளாளராக அ.ரஜீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## இன்று நாட்டார் இசைமாலை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் இன்று திங்கட்கிழமை பி.ப 2 30 மணிக்கு கே. வரப்பிரதன் தலைமையில் நாட்டார் வழக்கியற் கழகத்தின் நாட்டார் இசைமாலை நிகழ்வு நடைபெறவுள்ளது. (செ)

## சமுர்த்தி செயலணி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி தெற்கு உடுவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தாவடி வடக்கு J/194 கிராம அலுவலகர் பிரிவுக் குட்பட்ட சமுர்த்தி செயலணிக் கூட்டம் இன்று பி.ப 3 00 மணிக்கு கிராம அலுவலர் வி. நாகேந்திர ராஜா தலைமையில் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (க-06)

★ ★ ★

வலிவடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெல்லிப்பழை கிழக்கு J/ 227 கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி செயலணிக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை சித்தியம் புளியடியில் உளள கலைச்செல்வி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. கூட்டம் காலை 8.30 மணிக்கு வலையம் 01 சமுர்த்தி முகாமையாளர் திருமதி ஜெ. ஜேசுராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு 18-35 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. உதயதரன் கேட்டுக்கொள்கின்றார். (க-06)

# புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தங்கியிருந்து சமாதான முயற்சிகளில் ஈடுபட தடையில்லை

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்தும் லண்டனில் தங்கியிருப்பதில் பிரிட்டன் அரசுக்கு எந்த வித ஆட்சேபனையும் கிடையாதென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன் அரசு விடுதலைப் புலிகள் அமைப்பினை பயங்கரவாத அமைப்பாக கருதி தடை செய்துள்ள நிலையிலும் அன்ரன் பாலசிங்கம் அங்கு தங்கியிருந்து சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபட எதுவித தடைகளும் கிடையாது.

தற்போது ஒஸ்லோ சென்றுள்ள பாலசிங்கம் லண்டனுக்கு திரும்பி வருவார் எனவும் சமாதான முன்னெடுப்புக்களின் பிரதான தளமாக தொடர்ந்தும் பிரிட்டனே திகழும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளில் புலிகள் தரப்பின் பிரதான தொடர்பாளராக இருக்கும் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் இருந்து வெளியேற்ற ஐரோப்பிய நாடுகள் எவையும் விரும்பாதெனவும் மேலும் அறிய முடிகிறது. [உ]

## இராசி பலன்

5-03-2001
[மாசி 21, திங்கள்]
தசமி மு.ப 11 04 வரை
திருவாதிரை மு.ப 9.34 வரை
ராகுகாலம் 7 56- 9 26
சுபநேரம 12 26- 1 56
சித்தாமிர்தம்.

**மேடம்**
இனிய சம்பவம், தனவரவு, முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை.

**இடபம்**
மதிப்புக் குறைவு, விதண்டாவாதம், காரிய தாமதம், தனவிரயம்.

**மிதுனம்**
ஆழ்ந்த சிந்தை, பெரியோர் ஆசி, போசன சுகம், முயற்சி கைகூடும்.

**கடகம்**
கடன் தொல்லை, சுபச் செலவு, காரிய தாமதம், பிரயாணம்.

**சிங்கம்**
மனமகிழ்ச்சி, தெய்வ தரிசனம், தனலாபம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
உத்தியோக நன்மை, பணியாளர் உதவி, நல்ல செய்தி, காரியம் கைகூடும்.

**துலாம்**
ஓய்வு நிலை, பிதா வழி உறவு, பிரயாணம், திட்டமிடல்.

**விருச்சிகம்**
மனக்கிலேசம், எதிர்பாராத பிரச்சினை. பிரயாண பயம், காரிய தாமதம்.

**தனுசு**
பிரயாணம், அபூர்வ சந்திப்பு, தனவரவு, கௌரவம்.

**மகரம்**
எதிரிகளால் நன்மை. புதிய முயற்சி, காரியம் கைகூடும், திடீர் பயணம்.

**கும்பம்**
கலந்துரையாடல், உஷ்ண வியாதி. வியாபாரமேன்மை, தாழ்வு நிலை.

**மீனம்**
அரசாங்க ஆதரவு, சுப செலவு, உறவினர் மனஸ்தாபம், அற்பர் நேசம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## இலங்கை இராணுவத்திற்கு இப்படியும் ஒரு உதவி

(கொழும்பு)

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கைத் தமிழர் ஒருவர் இலங்கை இராணுவத்தினரின் தேவைக்காக 10ஆயிரம் அமெரிக்க டொலரினை வழங்கியுள்ளார்.

இலங்கை இராணுவத்திற்கு நிதி சேகரிக்கும் முகமாகவே அமெரிக்காவில் வசிக்கும் பிரஸ்தாப தமிழர் மேற்படி நிதியை வழங்கியுள்ளார்.

அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக அந்நாட்டின் பாதுகாப்பிற்கு தான் நிதி வழங்க முன்வந்துள்ளதாக அந்நபர் தெரிவித்துள்ளார். (க- 09)

## தாமரை இலை பறித்தவர் சடலமாக மீட்பு

(மந்திகை)

தாமரை இலை பறிப்பதற்காகக் குளத்திற்குச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் வரணி குருக்கள் குடியிருப்புப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மேற்படிஇடத்தைச்சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான க குமாரசாமி (வயது 47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்

வயலில் சூடு அடித்து விட்டு மதிய உணவு உண்பதற்காக அருகிலுள்ள குளத்தில் தாமரை இலை பறிப்பதற்காகச் சென்றவரை நீண்டநேரமாகியும் காணாது தேடிய பொழுது, குளத்தில் சடலமாக காணப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் சடலத்தினை மீட்டு பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில்ஒப்படைத்தனர்மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது (செ-23)

## புலிகள் கௌரவமாகவே எம்மை நடத்தினர் விருவிக்கப்பட்டோர் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மை கைதிகளாக வைத்திருந்தார்களே தவிர எவ்வித மான பாதிப்பும் அவர்களால் எமக்கு ஏற்படவில்லை.

மேற்கண்டவாறு வவுனியாவில்வைத்து விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட இரண்டு சிங்கள மீனவர்களும் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பரில் மாமடு வாவியில் கடற்றொழிலில் ஈடுபட்டபோது இருவரும் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. (க-ம)

## 1-ம் தர மாணவர்களுக்கு மதிய உணவுத்திட்டம்

(கொழும்பு)

நாடு தழுவிய ரீதியாக முதலாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, இலவசமதிய உணவு வழங்கும் திட்டமொன்று இரண்டாந் தவணையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

சுகாதாரம் மற்றும் கல்வியமைச்சைச் சேர்ந்த குழுவின் பரிந்துரைக்கமைவாகவே மேற்படி நடவடிக்கைகள் இடம்பெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக சுசில் பிறேம் ஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (செ-இ)

## 84 நோயாளிகளுக்கு வவுனியாவில் சிகிச்சை

(கொழும்பு)

கிளிநொச்சி, மல்லாவி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற வவுனியாப் பிரதேசங்களில்இருந்து84நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக கடந்தவாரம் வவுனியா வைத்தியசாலை சென்றுள்ளனர். அதே தினங்களில் சிகிச்சை பெற்ற68 நோயாளர்கள் இராணுவக்கட்டுப்பாடற்ற இடங்களுக்குத் திரும்பி உள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## வழக்குகள் மாற்றம்

(வவுனியா)

அவசரகால தடைச்சட்டத்தின் கீழ் வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சுமார் 300 வழக்குகள் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இன்று ஒரு தகவல்

# இனிமையான இல் வாழ்க்கை

இன்றைய நிலையில் குடும்பத்தை நன்கு நடத்திச் செல்வதே ஒரு தனிக்கலை. அதனிலும் வென்று விளங்குக. செலவுகளைச் சுருக்குக. செய்யும் செலவுகளையும் ஒரு முறைக்கு இரு முறை எண்ணிப் பார்த்துச் செய்க. இனி வரும் ஆண்டுகளிலேனும் சிக்கனத்தை மேற்கொள்க. எதிர் காலத்தைப் பற்றிக்கவலைப் படுவதால் பயன் இல்லை. சிக்கனமாக இருந்து எதிர் காலத் திட்டத்திற்காகப் பணம் சேர்த்தலே கடமை. பணம் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில்கருமியாகி விடாதே.

விலையுயர்ந்த பாத்திரங்கள், பண்டங்கள்வாங்கவேண்டாம். படாடோபத்தை விட்டொழி. மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காகப் பொய்யான வாழ்க்கை நடத்தாதே. ரொட்டியும் வெண்ணையும் சாப்பிடும் பழக்கத்தை வளர்த்துக்கொள்க, உடம்புக்கும் நல்லது உழைப்பும் குறைவு, வரும் விருந்தினர்க்கு பிஸ்கட்டும், தேநீரும் மட்டும் வழங்குதல் போதுமானது. விருந்தினர் மெச்ச வேண்டுமென்று பல சிற்றுண்டிகளைச் செய்து, உன்னை நீயே வருத்திக்கொள்ளாதே. குடும்பச்சடங்குகளை இயன்ற அளவுக்குக் குறைக்க வேண்டும் வாழ்வின் துவக்கத்தில் இருக்கின்றாயா? மனைவியின் மனம் நோகாதவாறு மெல்லியனாய் நடக்க முயல வேண்டும். நடக்கவும் வேண்டும் நோக வைத்துத் திருத்தும் நாட்கள் வேறு. பின்னாளில் பார்க்கலாம்

வயதில் முதிர்ந்த அன்னை உங்களுடன் இருக்கின்றாரா? அவரை அன்புடன் பேணிவர வேண்டும் அவர்களுக்கோ வயது தளர்ச்சி. ஏமாற்றம். என்ன செய்வது? மனைவிக்கும் அன்னைக்கும் கருத்து வேறுபாடா? அப்படிப்பட்ட நிலையிலும் மனைவி இல்லாத நேரத்தில் அன்னையிடம் உன் அன்பைச் செலுத்து நமக்கு ஒருவரின் அன்பு என்றும் உண்டு என்றும் அவரை நம்பச் செய். அந்த நம்பிக்கை உள்ள வரையிலுமே அவரது வாழ்வு ஓரளவுக்கேனும் மன நிறைவுடன் இருக்கும். மனைவியையும் சொல்லால் கடிய வேண்டாம். மனைவி தானே அன்னையின் பெருமையை உணர்ந்து திருந்த முடியுமா? எனப் பொறுத்திரு, திருந்தா விட்டாலும் கவலைப் பட வேண்டாம். காலம்பிணக்கை மாற்றும்

இடையூறுகளெல்லாம் சேர்ந்ததே இறைவனின் விளையாட்டாகும். இவை தவிர்க்க முடியாதவை. இறைவன் அறியாமையை நம்மிடம் படைத்தான். ஆசைகளையும், உணர்ச்சிகளையும் படைத்தான் நம்மை வினைகளை விதைக்கச்செய்கிறான். செயல்களை விளையச் செய்கிறான். செயல்களை நாம் நுகர்வோம். அவன் அவற்றை நாம் நுகரவும் செய்தலால் அவன் திருவிளையாடல் நடைபெறட்டும். நடப்பது நடக்கட்டும். நம்மால் ஆகக் கூடியது ஒன்றுமில்லை. எதற்கும் கவலைப்பட வேண்டாம் கவலைப்பட்டு உன்னை நீயே வாட்டிக்கொள்ளாதே. அன்புமிக்க வாழ்வில் இனியவர் பிரிவால் மறைவு தாங்க முடியாத துயரத்தை விளைவிப்பது இயற்கையேஆயினும்நம்மைப் படைத்தவனுடைய பேராட்சியையும், பிறப்பு, இறப்பும் இவ்வுலகத்தில் தவிர்க்க முடியாதவையாக இருப்பதையும் உணர்ந்து ஆறுதல் பெறுவதே நமது கடமையாகும். துயரினை மறக்கவே முயல வேண்டும் இத்தகைய நிலைகள் வாழ்க்கையில் வரும், போகும் கலங்கக்கூடாது. நமது கடமையைச் செய்து வரவேண்டும். எல்லோருடனும் அன்பாகப் பழகியிருக்க வேண்டும். அளவுடன் பேச வேண்டும். சிலருடன் நெருங்கிப் பழகி வர வேண்டும். நட்பும் அளவுடன் இருக்கட்டும்.

க.ந. இராமலிங்கம்

## புலிகள் தடைவிவகாரம்

# பிரிட்டனை பின்பற்றுவதற்கு ஏனைய நாடுகளும் முயற்சியாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை விதித்ததை அடுத்து கனடா. அவுஸ்திரேலியா, ஜேர்மனி நோர்வே ஆகிய நாடுகளும் துரித கதியில் தடை நடவடிக்கையை மேற் கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

இதுவிடயம்தொடர்பாகஇந் நாடுகள்விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை வெகு உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளையில்விடுதலைப் புலிகளை தடை செய்யும் விவகாரத்தில் தென்ஆபிரிக்காவின் செயற்பாடுகள்எவ்வாறு அமையும்என்பது பற்றி திட்டவட்டமாக எதனையும் கூற முடியாது என கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் தென் ஆபிரிக்காவின் செயற்பாடுகள் குறித்து இலங்கை அரசு அவதானித்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. [க-வ]

## நாளை வீமஏகாதசி

(மந்திகை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாளை செவ்வாய்க் கிழமை 'வீம ஏகாதசி' விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றையதினம் புராணபடனம் படித்து இரவு நான்கு ஜாமம் பூஜைகள் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி ஆலயச் சூழலில் இரவுநேர ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (செ-23)

# மதுபோதை ஒழிப்பிற்கு உரமூட்டும் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

எம் சமூகத்தைச் சீரழிக்கும் மது போதை, புகைத்தல் எனும் தீய பழக்கங்களைக் களையவும் சமூகத்தில் நற்பண்புகளை வளர்க்கவும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

எமது சமூகம் விழிப்புணர்வோடு, மதுபோதை, புகைத்தல் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு நாமும் எமது பங்களிப்பைச் செய்வதோடு மாணவ சமுதாயத்தின் ஒன்றுபட்ட மன உணர்வாக கீழ்க்காணும் தீர்மானங்களை ஏற்று இத்தீர்மானம் நிறைவேற்றுகிறோம்.

யாழ் மாவட்டத்தில் உள்ள 20 பாடசாலைகளின் மாணவப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சமூக விழிப்புணர்வு கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள், அரச, பொதுநிறுவனங்கள். மருத்துவமனைகள் ஆலயங்கள் என்பவற்றை சூழ உள்ள மதுபான விற்பனை நிலையங்களைவிற்பனைக்குத் தடை செய்வதுடன், எதிர் காலத்தில் இவற்றிற்கு அனுமதி வழங்காது இருக்க வகை செய்தல்.

பாடசாலைகளில் மது, புகை ஒழிப்புக்காக, மாணவர் மன்றம், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களில் ஒவ்வொரு 'மது ஒழிப்பு குழு' உருவாக்கப்பட்டு. பெற்றோர் ஆசிரியர் சங்க 'மது ஒழிப்பு-குழு' வின் உதவியுடன் மாதமொரு செயற்பாடு, மாணவர் மன்ற 'மது ஒழிப்பு-குழு' வினரால் அப்பாடசாலையில் ஒரு நிகழ்வாக செயற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மது, புகை பாவிப்பதில்லை என மாணவர் அனைவரையும் உறுதிமொழி எடுக்கச் செய்தல்.

பாடசாலை. கல்வி சார் வளாகத்தினுள், சிற்றுண்டி சாலைகளில் 'புகை' பொருட்கள் விற்பனை தடைசெய்யப்பட வேண்டும் என்பதுடன். இவ்விடங்களில் ஆசிரியர்கள் புகைப் பிடித்தல், புகை பொருட்களை வைத்திருத்தலை கைவிடவேண்டும்.

பாடசாலை அதிபர்களுக்கும்ஆசிரியர்களுக்கும்தொடர்பான விழிப்புணர்வு கருத்துரை வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை, கல்வி நிறுவனங்கள், மற்றும் அனைத்து கோயில்களிலும், சமய நாடகங்கள், சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும் அதே சமயம், மது ஒழிப்பு நடவடிக்கைக்காக 10% நேரத்தை ஒதுக்குதல் வேண்டும்

பாடசாலை, கோயில் திருவிழா, மக்கள் கூடும் இடங்ளில் பியர், புகைபொருள், சாராயம் போன்றவற்றின் விளம்பரப் பலகைகளுக்கு பதிலாக, இவற்றிற்கு எதிர் வாசகங்களை விளம்பரப்படுத்தல் ஆகியவையாகும். (க)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம்02-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி. வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 181091 ஏ | 181091 பி |
| 182476 ஏ | 182476 பி |
| 182476 சி | 182476 டி |
| 183667 ஏ | 183697 பி |
| 183667 சி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 175461 ஏ | 181765 ஏ |
| 181765 பி | 181784 ஏ |
| 181817 ஏ | 181817 பி |
| 181818 ஏ | 181818 பி |
| 181818 சி | 181840 ஏ |
| 181859 ஏ | 181868 ஏ |
| 181868 பி | 181899 ஏ |
| 181899 பி | 181981 ஏ |
| 181981 பி | 182005 ஏ |
| 182005 பி | 182136 ஏ |
| 184355 ஏ | 184355 பி |
| 184356 ஏ | 184356 பி |
| 184364 ஏ | 184369 ஏ |
| 184369 பி | 184361 சி |
| 184369 டி | 184379 ஏ |
| 184397 ஏ | 184897 பி |
| 184397 சி | 184397 டி |
| 184397 ஈ | 184398 எப் |
| 184436 ஏ | 184436 பி |
| 184510 ஏ | 184524 ஏ |
| 184524 பி | 184527 ஏ |
| 184551 ஏ | 184552 ஏ |
| 184557 ஏ | 184557 பி |
| 184593 ஏ | 184656 ஏ |
| 184712 ஏ | 184738 ஏ |
| 184738 சி | 181981 சி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 184738 பி | 165314 ஏ |
| 165314 பி | 177610 ஏ |
| 177934 ஏ | 177934 பி |
| 180603 ஏ | 180603 பி |
| 180603 சி | 180611 ஏ |
| 181093 ஏ | 181178 ஏ |
| 181178 பி | 181179 ஏ |
| 181179 பி | 181294 ஏ |
| 181294 பி | 181294 சி |
| 181349 ஏ | 182280 ஏ |
| 182433 ஏ | 182433 பி |
| 182433 சி | 182433 டி |

| | |
|---|---|
| 182433 ஈ | 182510 ஏ |
| 182519 ஏ | 182541 ஏ |
| 182569 ஏ | 183552 ஏ |
| 183552 பி | 183552 சி |
| 183596 ஏ | 183641 ஏ |
| 183641 பி | 183641 சி |
| 183670 ஏ | 183670 பி |
| 183670 சி | 183708 ஏ |
| 183708 பி | 183818 ஏ |
| 183818 பி | 183832 ஏ |
| 183909 ஏ | 183918 ஏ |
| 184007 ஏ | 185342 ஏ |
| 185371 ஏ | 186374 ஏ |
| 185415 ஏ | 182510 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 184634 ஏ | 184634 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 175444 ஏ | 180195 ஏ |
| 181900 ஏ | 181900 பி |
| 184341 ஏ | 184341 பி |
| 184347 ஏ | 184382 ஏ |
| 184390 ஏ | 184390 பி |
| 184400 ஏ | 184400 பி |
| 184482 ஏ | 184570 ஏ |
| 184570 பி | 184571 ஏ |
| 184572 ஏ | 284572 ஏ |
| 1846.9 ஏ | 184619 பி |
| 184619 சி | 184619 டி |
| 184619 ஈ | 184620 ஏ |
| 184620 பி | |
| 184620 சி | 184624 பி |
| 184624 பி | 184786 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 142651 ஏ | 160207 ஏ |
| 160207 பி | 174690 ஏ |
| 174690 பி | 181061 ஏ |
| 182499 ஏ | 183544 ஏ |
| 183581 ஏ | 181481 பி |
| 183581 சி | 183581 டி |
| 183581 ஈ | 183587 எவ் |
| 183587 ஏ | 183587 பி |
| 183616 ஏ | 183616 பி |
| 183730 ஏ | 183762 ஏ |
| 183762 பி | 183846 ஏ |
| 183895 ஏ | 183846 ஏ |
| 183895 ஏ | 183895 பி |
| 183906 ஏ | 183906 பி |
| 183917 ஏ | 183917 பி |
| 183917 சி | 183917 டி |
| 183917 ஈ | 185351 ஏ |
| 185397 ஏ | 185397 பி |
| 185416 ஏ | |

## கப்பல் விமான பயண

# பதிவுகள் சேவைகள் இடம்பெறும் தினங்கள்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் குடா நாட்டில் இருந்து வேறு இடங்களிற்கு செல்வோர்க்கான விமான, கப்பல் பயண பதிவுகள் மேற்கொள்ளப்படும் தினங்கள் மற்றும் இப் பயண சேவைகள் இடம்பெறவுள்ள தினங்களை 'றான்' அலுலகம் வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் 9 ம் திகதி கப்பல் பயண பதிவுகளை மேற்கொள்வோர் 20, 22 ஆம் திகதிகளிலும் 16 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 27, 29 ஆம் திகதிகளிலும், 23 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் அடுத்தமாதம் 3,5 ஆம் திகதிகளிலும் கப்பல்பயணத்தினை மேற்கொள்ள முடியும்.

5 ஆம் திகதி விமான பயண பதிவுகளை மேற்கொள்வோர் 8, 9, 10 ஆம் திகதிகளிலும் 7 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 12, 13, 14 ஆம் திகதிகளிலும், 12ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 15, 16, 17 ஆம் திகதிகளிலும் 14 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 19, 20, 21 ஆம் திகதிகளிலும், 19 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 22, 23, 24 ஆம் திகதிகளிலும் 21, ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 26, 27, 28 ஆம் திகதிகளிலும் 26 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் 29, 30, 31 ஆம் திகதிகளிலும் 28 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்வோர் வரும் மாதம் 2, 3, 4 ஆம் திகதிகளிலும் விமானப் பயணங்களை மேற்கொள்ளமுடியும்.

விமானப் பதிவுகள் பிற்பகல் 2:00 மணியளவில் மேற் குறிப்பிடப்பட்ட தினங்களில் மேற்கொள்ளப்படும் என 'றான்' அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. [உ]

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

[ஆனைக்கோட்டை]

ஆனைக் கோட்டை அ.மி. த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் சி. நாகையா தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. மாதவக்குமாரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்; (செ-125)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

உதிரவேர்கள் நூல் அறிமுக விழா இன்று யாழ் இலக்கிய வட்டத்தில் தலைவர் 'செங்கை ஆழியான்' தலைமையில் அண்மையில் இடம்பெற்றது

இந் நிகழ்வு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பில் இடம்பெற்றது

இந் நிகழ்வில் வரவேற்புரையினை கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி நிகழ்த்தினார்.

நூலின் வெளியீட்டுரையை கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளையும் (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்) நூலின் முதற் பிரதியினை குழந்தை ம. சண்முகலிங்கனும் பெற்றுக் கொள்ள மதிப்புரையினை மூதறிஞர் சொக்கன் வல்வை ந. அனந்தராஜ், நல்லை அமிழ்தன் ஆகியோரும் நிகழ்த்தினர். நூலின் ஆசிரியர் மு. இராதாகிருஸ்ணன் பதிலுரையை நிகழ்த்தினார். (க-10)

# விமானம் வெடித்து சிதறியது

# மயிரிழையில் பிரதமர் உயிர்தப்பினார்

## தாய்வானில் சம்பவம்

(பாங்கொக்)

தாய்லாந்து தலைநகரான பாங்கொக்கில் அந்நாட்டு பிரதமர் பயணம் செய்யவிருந்த விமானம் வெடித்து சிதறியதில் பிரதமர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

தாய்லாந் பிரதமர் பவ்சிங் பயணம் செய்யவிருந்த ஜெற் விமானம் பிரதமர் ஏறுவதற்கு 35 நிமிடத்திற்கு முன்னர் ஓடு பாதையில் வெடித்துச் சிதறியது. இதில் விமான பணியாள் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்விமானம் வெடிப்பதற்கு சதிவேலையே காரணம் என புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தை அடுத்து பிரதமரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொலைத் தொடர்பு அமைச்சராக பணியாற்றிய இவர் கடந்தமாதம் பிரதமராக பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## சட்டசபை தேர்தல்

(புதுடில்லி)

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல்கள் ஏப்ரல் மாத இறுதியில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வன்முறை புரிவோரை கண்டஇடத்தில் சுட உத்தரவு

(ஜகார்த்தா)

போர்னியோத் தீவில் வன்முறைகளில் ஈடுபடுவோரை கண்ட இடத்தில் சுடுமாறு இந்தோனேசிய அரசு கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வன்முறைகளின் கோடூரத்திலிருந்து மக்களை விடுவிக்க கலகக் காரர்களை கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாக இந்தோனேசிய பொலிஸ் மா அதிபர் ஜெனரல் மைமாண்டோரோ தெரிவித்துள்ளார். [உ-9]

## உலக சனத்தொகை துரித அதிகரிப்பு

உலக சனத்தொகை 2050 ஆம் ஆண்டு 930 கோடிமுதல் ஆயிரத்து 90 கோடி வரை அதிகரிக்கலாம் என ஐக்கிய நாடுகள் கணிப்புத் தெரிவித்துள்ளது

இது சனத்தொகை அதிகரிப்பு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே பெருமளவு ஏற்படும் எனவும் அக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2050 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மக்கள் தொகை 820 கோடியாகக் காணப்படும் என்றும் இது உலக சனத்தொகையில் 88 சதவீதமாக இருக்கும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. [உ-3]

## ஐ. நா. படையினர் ஆபிரிக்கா விஜயம்

### இந்திய தளபதி தெரிவிப்பு

(புதுடில்லி)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையில் உள்ள இந்தியப் படையினர் எதியோப்பியா மற்றும் ஆபிரிக்கா நாடுகளுக்கு அடுத்த மாதம் முதல் வாரம் செல்ல இருப்பதாக இந்திய இராணுவத்தின் துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவித்த இராணுவத் துணைத் தலைவர் ஐ நா அமைதிகாக்கும் படையில் உள்ள 318 இந்திய வீரர்கள் எதியோப்பியஎரிசெல்யா பகுதிகளில் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவார்களென்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதியோப்பியா, எரிசெல்யா நாடுகளுக்கு இடையே கடந்த இரண்டு வருடங்களாக போர் நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (க-7)

## ஜம்முவில் தாக்குதல் 17 பொலிஸார் பலி

[ஸ்ரீநகர்]

ஜம்மு காஷ்மீரில் றஜோடி மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸார் தரப்பில் 17பேர் கொல்லப்பட்டனர்.

ஜம்மு காஷ்மீர் பொலிஸ் படை மற்றும் இந்திய றிசேவ் படையினர், கோட்டைக் காலாபான் என்னுமிடத்தில் தீவிரவாத நடவடிக்கைகளை விசாரித்து விட்டு திரும்புகையில் இத்தாக்குதல் இடம் பெற்றுளளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[க-07]

## திரிபுராவில் தாக்குதல் 11 படையினர் பலி

(புதுடில்லி)

திரிபுரா மாநிலத்தில் பாம்பூர் எனும் இடத்தில் கரையோர காவலில் ஈடுபட்டிருந்த மத்திய றிசேவ் படையினர் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எல். எல். எஸ். ரி. எனும் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பு மலை உச்சியில் இருந்து நடத்திய எதிர்பாராத் தாக்குதலில் இவர்கள் பலியாகினர்.

இப்பகுதியில் அதிகரித்த தீவிரவாதிகளின் நடமாட்டத்தை தக்கட்டுப்படுத்தும் வகையில், இவர்கள் காவலரண் அமைத்து செயற்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தை யடுத்து அப்பகுதிக்கு விசேட படைப்பிரிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-7)

## பிறக்கும் குழந்தை ஆணா? பெண்ணா?

### பரிசோதனைக்கு தடை

(புதுடில்லி)

பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை அறிய நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து வாக்கு மூலங்களை சமர்ப்பிக்குமாறு இந்தியஉச்ச நீதிமன்றம் மாநிலங்களுக்கு ஆணையிட்டுள்ளது.

இத்தகைய பரிசோதனைகளினால் பிறக்கப் போவது பெண்குழந்தை என்று அறிந்ததும் அதனை கர்ப்பத்திலே அழிக்கும் முயற்சி பெருகிவருவதால்இந்த முறை நாட்டுக்கு தேவையா தேவையில்லையா என்பதனை நான்கு வாரங்களுக்குள் தாக்கல் செய்யாவிட்டால் கடமை தவறும் மாநிலங்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிபதி எ.ரி. சாகுர், நீதிபதி எஸ். எஸ். வாரியாகு மாநிலங்களின் அதிகாரிகளுக்கு எச்சரித்துள்ளார். (க-7)

## தடைகளை தளர்த்துக

(வாஷிங்டன்)

கியூபாவுக்கு எதிராகவிதிக்கப்பட்டுள்ள சகலபொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா நீக்கிக் கொள்ளவேண்டும்என அமெரிக்கசெனற்சபை மற்றும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-8)

## உலக தரிசனம்

# இந்திய பிரதமரின் யுத்த நிறுத்தம் துணிச்சலான நடவடிக்கை

### அமெரிக்க செனட்டர் தெரிவிப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் பிரதம மந்திரி அடல்பிகாரிவாஜ்பாய் அறிவித்துள்ளயுத்த நிறுத்தம் ஒரு துணிச்சலான நடவடிக்கை என்று அமெரிக்க நாடாளுமன்றத்திலுள்ள இந்திய ஆதரவுக் குழுவின் இணைத்தலைவர் செனட்டர் ஜின்மெரடர்மான் வர்ணித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் சிறப்பை இஸ்லாமாபாத் புரிந்து கொண்டு விட்டது என்று வாஷிங்டன் நாடாளுமன்றில் பேசுகையில் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகளுடன் அண்மையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் பயணம் மேற்கொண்ட இவர் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நல்ல எண்ணம் இருநாடுகளுக்கும் உண்டு என்றும் தெரிவித்துள்ளார். (க-7)

## பாண்டேக்கு கருங்காவல் தண்டனை

(புதுடில்லி)

வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் தமிழ்நாடுநகராட்சிமன்ற முன்னாள் நிர்வாகியும், குடிநீர் வழங்கல் துறையின் முன்னாள் செயலாளருமான ஐ ஐ எஸ். பாண்டேக்கு 4வருட கடுங்காவல் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு இலட்சம் ரூபா அபராதப் பணம் செலுத்த வேண்டும் எனவும் நேற்று முன்தினம் சென்னை தனி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (உ-8)

## தி.மு.க வெற்றி உறுதி

(புதுடில்லி)

தி.மு கவுடன் த மா.கா சேராவிட்டாலும் நடைபெற இருக்கும் சட்டசபைத் தேர்தலில் தி.மு.க வெற்றிபெறும் என்று தமிழக சபாநாயகர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்

தமிழக சபாநாயகர் பி டி ஆர் பழனிவேல்ராஜன்தனது 70வது பிறந்தநாள் விழாவை கொண்டாடிய போதுநிருபர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ-3)

## பணயக் கைதிகள் விருதலை

(லண்டன்)

ஈக்குவடோர் நாட்டின் அமேசன் காட்டுப் பகுதியில் இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால்கடந்த நான்கரை மாதங்களாக பணயம் வைக்கப்பட்டிருந்த வெளிநாடுகளைச் சேர்ந்த ஏழு உற்பத்தி தொழிலாளர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தொழிலாளிகளின் முதலாளிமார் 13மில்லியன் அமெரிக்க டொலரைக் கப்பமாகச்செலுத்திய பின்னரே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

(உ-8)

## ஆபத்தின் மத்தியில் பயணம் செய்த குழுவினர்

### பலரும் அதிர்ச்சி தெரிவிப்பு

(இலண்டன்)

பிரான்ஸ் ரயில் நிலையம் ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக பிரிட்டனிற்கு பயணம் மேற்கொண்ட 9பேர் மீது சட்டநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது

ஐந்து பெண்கள் மற்றும் 4 ஆண்கள் அடங்கிய இக் குழு ரயிலின் அடிப்பாகத்தில் பயணம் செய்தது குறித்து, பலரும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

மணிக்கு 186 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யும் ரயிலில் பிரஸ்தாப குழுவினர் எவ்வாறு பயணம்செய்தனர் என்பது குறித்து தீவிர விசாரணை இடம் பெற்று வருகின்றது.

03 வயதுப் பெண்குழந்தையுடன் பெண்கள் இவ்வாறு பயங்கர பயணம்மேற்கொண்டமை குறித்து பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளன. (க-07)

## படை பலம் பெருக்குவதில் இந்தியா முனைப்பு

(புதுடில்லி)

11 இலட்சம் வீரர்களைக் கொண்டஇந்திய இராணுவம் தனது படை பலத்தை மேலும் அதிகரிக்க புதிய டாங்கிகள், விமானங்கள் என்பவற்றை கொள்வனவு செய்யவுள்ளது.

ஜெட் பயிற்சிவிமானங்கள், பழைய ரஷ்ய விமானத்தாங்கிக் கப்பல்கள் கொள்வனவு விஷயத்தில் இவ்வாண்டு ஒரு முடிவு ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவை தவிர, விமானங்களின் வருகையை முன்கூட்டியே அறிவிக்கும் சாதனங்கள், உளவுஅறியும் கருவிகள், ராடர்கள் ஆகியவையும் இந்தியாவின் கொள்வனவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

தற்போது இந்தியா உலகிலேயே நான்காவது இராணுவபலத்தைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## புதிய விண்வெளி வேவுகல தயாரிப்புப் பணிகள் நிறுத்தம்

### நாஸா நிறுவனம் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்கா நாஸா விண்வெளி நிலையம்தான் எதிர்காலத்தில் உருவாக்குவதாக எண்ணியிருந்தபுதிய விண்கல வேவுகலத்தின் தயாரிப்புப் பணிகளை நிறுத்தி விட்டதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை இவ் விண்கலத்தை தயாரிக்க 125 கோடி டொலர்செலவானது. எக்ஸ் 33 ரக இவ் விண்கலப் பணிக்கான செலவு கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதாகவும் மேலும் செலவு செய்ய முடியாது எனவும்அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை விண்வெளி நிலையங்களுக்கு அமெரிக்கா செய்யவிருந்த பங்களிப்புகளை அது குறைத்துக் கொண்டதாக அவ்வதிகாரி தெரிவித்தார்.

நாஸாவிற்கான நிதிஒதுக்கீடு குறைந்தது குறித்து புதிய அதிபர் டபிள்யு ஜோர்ச் புஷ் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-7)

நல்லாண்மை என்பது ஒருவற்கு தான் பிறந்த இல்லாண்மை ஆக்கின் கொளல்
- குறள்

# வலம்புரி

## புத்தகப் பங்கீடு

2001ம் ஆண்டின் முதலாம் தவணை முடிவதற்கு இன்னமும் ஒரு சில வாரங்களே இருக்கின்றது. எனினும் யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிற்குத் தேவையான பாடப் புத்தகங்கள் இதுவரை முழுமையாக வந்து சேரவில்லை. கடந்த வாரம் சில பாடங்களுக்கான புத்தகம் விநியோகிக்கப்பட்டது. ஆனால் அது சகல மாணவர்களுக்கும் போதுமானதாக இல்லை. இதனால் ஒருவகுப்பில் மூன்று மாணவர்களுக்கு ஒரு புத்தகம் என்றஅடிப்படையில் பாடப் புத்தகத்தை பங்கிட வேண்டிய துரதிஷ்டம் நேர்ந்துள்ளது.

சரக்குக் கப்பல்கள் ஒழுங்காக சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது - மதுபானங்கள் தாராளமாகக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும் போது மாணவர்களின் கற்றலுக்குத்தேவையான பாடப் புத்தகங்களைக் கொண்டுவர முடியாமைக்கான காரணத்தை கல்வி அதிகாரிகள் அறிக்கையிட்டு வெளிப்படுத்தினால், அதுநமது பாராளுமன்றப் பிரதிநிதிகள் அறிந்து கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். அல்லது பாடப் புத்தகத்தைக் கொண்டு வருவதுடன் லாபம் தரும் பொருளையும் கொண்டு வர வேண்டுமென்பதால் திட்டமிட்டு காலதாமதத்தை ஏற்படுத்தும் நேர்மையற்றவர்களின் செயலேஇதற்குகாரணமா என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் பாடப் புத்தகத்துடன் பல்வகைப் பொருட்கள் எடுத்துவரப்படுவதாகவும் அதன் காரணமாகவே பாடப் புத்தகங்களை முழுமையாக எடுத்து வரமுடியாதிருப்பதாகவும் கல்விச் சமூகத்தில் பல கதைகள் அடிபடுகின்றன.

எப்படியாயினும் இலவசப் பாடப் புத்தகங்களை தமிழ் மாணவர்கள் பங்கிட்டுக் கொள்வதைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதும் உரிய காலத்தில் இலவசப் பாடப் புத்தகங்களைத் தருவித்து மாணவர்களுக்கு வழங்கி அவர்களின் கல்வி தடைப்படாமல் பாதுகாப்பதும் மிக மிக அவசியமாகும்.

பாடப் புத்தகங்களில் பங்கு போடுவதால் வகுப்பறையில் ஏற்படும் பிரச்சினைகள் மாணவர்களின் உளநிலைப் பாதிப்புக்கும் காரணமாவதுடன் பெற்றோர் மத்தியிலும் சிக்கல்களை ஏற்படுத்தும்.

# விரதங்களிற் சிறந்த வீமஏகாதசியை நோற்று இகபரசுகங்களை இனிது பெற்றுய்வோம்

நாளை வீம ஏகாதசியை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

விரதங்களிலே மிகவும் உத்தமமானதும் அதி விசேடமானதுஏகாதசி விரதமாகும். மாதந்தோறும் பூர்வபச்கத்து ஏகாதசி அனைவராலும் அனுஷ்டிக்கப் படத்தக்கதாகும். இம்மைப் பயன்களை விரும்பி அனுஷ்டிக்கும் பூர்வபக்கத்து ஏகாதசியை காமியம் என அழைக்கப்படும். அதாவது அமாவாசையின் பின் பூரணைக்கு முன் வருவது பூர்வபக்கமாகும். முக்தியை நாடியனுஷ்ட்டிப்போர் நித்தியம் எனப்படும். அபரபக்ஷத்து ஏகாதசி விரதங்களையும் அனுஷ்டிக்கலாம்.

இப்பேர்ப்பட்ட ஏகாதசி விரதத்தை வீமனைத் தவிர குந்தி மைந்தர்கள் அனைவரும், துரியோதனன், சகுனி முதலிய கௌரவர்களும் அனுஷ்டித்து வந்தார்கள. வீமன் மாத்திரம் உபவாசமிருக்க முடியாமையினால் இந்த விரதத்தை அனுஷ்டிக்காமலிருந்தான்.

### வியாசரிடம் வினவல்

''இகபரசுகம் தரும் ஏகாதசி விரதத்தை நோற்று திருமாலைப் பூசித்து மோக்ஷமடைதலை விடுத்து உன் பெரிய உடலை வீணே வளர்க்கின்றாய்'' என்று துரியோதனன் முதலிய கௌரவர்கள் வீமனை பரிகாசம் செய்தனர். இதனால் வீமசேனன் மிகவும் துக்கமடைந்து நாணம் அடைந்தவனாய் வியாசமுனிவரையடைந்து அவரைப் பணிந்து ''சுவாமி உதராக்கினி பொறுக்க முடியாமையினால் ஏகாதசி விரதத்தை அனுஷ்டியா தொழிந்தேன். இதனை அறிந்த கண்ணன், சகுனி, துரியோதனன் முதலானோர் என்னைப் பழிக்கின்றனர். மாதந்தோறும் வரும் இருபக்கத்து ஏகாதசிகளாக வருடத்தில் இருபத்து நான்கு முறை வரும் ஏகாதசி விரதத்தை என்னால் நோற்றல் முடியாது. வருடத்திற்கொரு முறை அனுஷ்டிப்பதானால் வருடம் முழுவதும் வரும் ஏகாதசிகளை அனுஷ்டித்த பலனை அடையத்தக்க ஒரு உபாயத்தை தேவரீர், அடியேனுக்கு சொல்லியருளல் வேண்டும் அதனோடு இவ் விரதத்தை அனுஷ்டிக்கும் முறையையும் உரைத்தருளல் வேண்டும்.'' என்று பிரார்த்தித்து வேண்டினான்.

## பிரம்ம ஸ்ரீச.க.சுதர்சனக்குரு

இதனைக் கேட்ட வியாசமுனிவர் புன்னகை செய்து ''குழந்தாய் மாசி மாதத்திலே வளர்பிறையில் வரும் ஏகாதசியை முறைப்படி அனுஷ்டிப்பாயேல் அதன் பலன் வருடம் முழுவதும் வரும் இருபத்தி நான்கு ஏகாதசிகளையும் அனுஷ்டித்த பலனுக்குச் சமானமாகும். அவ்விரதத்தையனுடிக்கும் முறையையும் கூறுகின்றேன் கேட்டுதி'' என்றார்.

### அனுஷ்டிக்கும் முறை

''மாசி மாதத்தில் பூர்வ பக்கத்தில் ஏகாதசி நிகழும் போது விரதம் அனுஷ்டிப்போர் அன்று வைகறையில் நித்திரை விட்டெழுந்து ஸ்நானம் செய்து நித்திய கடன் முடித்து உணவு, வெற்றிலை பாக்கு முதலியன அருந்தாது இருத்தல் வேண்டும். மாலைக் காலமானதும் பூசை செய்யும் மண்டபத்தை சுத்தம் செய்து மாவிலை தோரணம் கட்டி கும்பம் வைத்து பொன்னாலான திருமாலின் திருவுருவத்தை ஸ்தாபித்து ஆவாகனஞ் செய்து, அபிடேகம் செய்து, சந்தணம் சாத்தி, துளசி, மலர்முதலாம் நறுமலர்களால் அருச்சித்து, தூபதீபங்காட்டி திருவமுதை நிவேதித்து சோடோபசாரங்கள் கொண்டு பூசித்து, அட்டாட்சரத்தையுச்சரித்துக் கொண்டு பிரபந்தங்களைப் பாராயணம்பண்ணி, விஷ்ணு புராண படனஞ் செய்து அன்று இரவு நித்திரை செய்யாது (நான்கு சாமங்களிலும் திருமாலைப் பூசித்து) பின்னரும் அதிகாலையில் மேற் சொன்னபடி பூசித்து ஆசாரியருடைய மனம் மகிழ பூவருக்கு வஸ்த்திரம், தாம் அலாதி தட்சணை கொடுத்து விஷ்ணு அடியார்களைப் பூசித்து, பிராமணர்களுக்கு இயன்றளவு தானம் வழங்கி, துவாதசியில் விஷ்ணு அடியார்களுடனும், சுற்றமித்திரர் கருடனிருந்து பாரணஞ் செய்தல் வேண்டும். பாரணஞ் செய்த தினத்திலன்று பகறகாலத்தில் நித்திரை செய்தலாகாது மாசி மாதத்திலே சிவராத்திரி விரதமும் இந்த ஏகாதசி விரதமும் நிகழ்வதால் இவ்விரண்டினையும் நோற்பவர்கள் மேலான பதவியையடைவார்கள் என்பது திண்ணம்.''

### நோன்பு நோற்றல்

இவ்வாறு ஏகாதசி விரத மான்மியத்தையும் அதனை அனுஷ்டிக்க வேண்டிய முறையையும் வியாசமுனிவர் வீமனுக்குச் சொல்லிய பின்பு வீமன் அம்முனிவரிடம் அனுமதி பெற்று, தனது நகரையடைந்து மாசிமாதஜ்து பூர்வபக்கத்து ஏகாதசியை நோற்கத் தொடங்கினான்.

அத்தினத்தில் அவன் காலைக் கடன்களெல்லாம் முடித்து திருமாலைப் பூசித்த பின்னர், அவனது வயிற்றிலே பெரும்பசியுண்டாக, அவன் ஒரு சோலையையடைந்தான், அடைந்து அங்குள்ள வாழைப்பழக் குலைகளையும், மாம்பழம், பலாப் பழங்களையும், கரும்புக்கட்டுக்களையும், இளநீர்க்குலைகளையும், ஆயிரக்கணக்கெடுத்தெடுத்து அருந்தினான். அப்பவும் அவனது வயிற்றுப்பசி தணிந்திலது. பின்னர் நூற்றுக்கணக்கான குடங்கள் கொண்ட பசும்பாலையெடுத்துக் குடித்துத் தன் பசியொருவாறு தணியப் பெற்றான். அதன்பின் அவன் மாலைக்காலத்தில் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்து திருமாலைப்பலவாறுதோத்திரம சொல்லிப் பூசித்து, அன்றிரவு மூழுவதும் நித்திரையின்றியிருந்து அடுத்த நாட் காலையில் நித்திய கடன் முடிதது விஷ்ணுவை பூசை செய்து பிராமணர்களுக்குத் தானம் வழங்கி, துவாதசியின் விதிப்படி பாரயணஞ் செய்யத் தொடங்கிய போது அவனதுமிடறு உலர்ந்தமையால் விக்கலுண்டானது. அவன் நெய்கலந்த அன்னத்தை முதலுண்டு நீர், பால், மோர் முதலியன அருந்தி மிடறை நனையச் செய்து, அதன்பின்வயிறாரப் போசனமுண்டு விரதத்தை முடித்தான்.

### வீம ஏகாதசி

அன்று தொடக்கம் மாசி மாதத்தில் வருகின்ற பூர்வ பக்கத்து ஏகாதசி ''வீம ஏகாதசி''யென்று வழங்கப்பட்டு வரலாயிற்று. எனவே வீமசேனனால் அனுஷ்டிக்கப்பட்ட இவ்விரதத்தை சிரத்தையோடு அனுஷ்டிப்போர் சகலவிதமான துன்பங்கள், பாவங்களின்றும்விடுபட்டு இம்மையில் நற்பேறுகளைப் பெற்று மறுமையில் நற்கதியையடைவர் என்பது திண்ணம். வியாசமுனிவரின் வாக்குப்படி பன்னிரு மாதங்களிலும் வரும் ஏகாதசிகளை அனுஷ்டித்து அதனால் பெறும் பயன்கள் அனைத்தையும் வீமன் அனுஷ்டித்த இந்த மாசி மாதத்து பூர்வ பக்கத்து ஏகாதசி விரதம் ஒன்றை அனுஷ்டித்து நற்கதியைப் பெறுங்கள்.

# கோப்பாய் பிரதேசசெயலக நடமாடும் சேவை 15ம் திகதி அச்சுவேலியில்

(ஆவரங்கால்)

கோப்பாய் பிரதேச செயலக நடமாடும் சேவைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் பி. பகல் 2. 30 மணி வரை அச்சுவேலி பிரதேச சபை உப காரியாலயத்தில் இடம்பெறும் என்று மேற்படி பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி செயலக நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்ததும் நாளை விடுமுறை தினமாதலால் மேற் குறிப்பிட்ட திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி மேற்படி செயலமர்வு எது வித மாற்றமுமின்றி செயற்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க-57)

## தவக்காலச் சிந்தனை - 6



ஏனோதானோ என்று வாழ்வினில் சலனங்கள் செய்யும்இந்த மானுடசமுதாயத்திற்கு இந்தவாசகங்கள் ஒருசவால். ''தான் மட்டும் வாழ்ந்தால் போதும்'' என்றெண்ணி அயலானின் வாழ்வை சூறையாடி கேள்விக் குறியாக்கும் வஞ்சகக் கூட்டத்திற்கு இந் நற்செய்தி ஒரு எச்சரிக்கைப் பலகை. மேலும் மானுடம் மகுடம் சூடவும், மனிதநேயம் கட்டியெழுப்பப்படவும் மனித மாண்பு பனையாய் உயர்ந்து நிற்கவும் விளைவோருக்கு இது வழிகாட்டி நிற்கும் கை காட்டுப் பலகை. அகிலத்தின் அகராதியில் அகிம்சைப் பூ சூட்டப்படவும், அன்பு தழைத்து ஓங்கவும், வெறியும், வன்முறையும் ஓயவும் அழைப்பு விடுக்கும் அத்தியாயம் இது.

-காவலன்-

# பழுதடைந்த பஸ்களை திருத்த 15 கோடிஒதுக்கீடு

(கொழும்பு)

பழுதடைந்துள்ள பஸ்வண்டிகளை திருத்தியமைப்பதற்கு இந்த ஆண்டில் 15 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 300 பஸ்களை திருத்தியமைத்து சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சேதமடைந்த பஸ் வண்டிகளை ஆறு மாதகாலத்தினுள் திருத்தியமைக்கு மாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். [க-03]

# மயக்கமுற்ற மாணவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(ஊர்காவற்றுறை)

ஆசிரியரால் தண்டிக்கப்பட்ட க.பொ.த (உயர்தர) வகுப்பு மாணவன் ஒருவன் மயக்கமுற்றநிலையில் காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் காரைநகர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

காரைநகர் பகுதியில்பிரபல பாடசாலை ஒன்றில் இடம் பெற்ற இவ்விவகாரம்குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது; குறிப்பிட்ட பாடசாலையில் உயர்தர மாணவர் ஒன்றிய கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பிரஸ்தாப மாணவனுக்கும் ஆசிரியருக்கும் கருத்து மோதல் ஏற்பட்டதை அடுத்து இவ் அசம்பாவிதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் ஆசிரியர்.மாணவர் உறவில் அதிருப்தியை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து பெற்றோர் மத்தியில் பலத்த அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது. (க-75)

அழகிற்கு அழகூட்டும் தங்க நகைகளை உடனுக்குடன் செய்து தருபவர்கள்

நியூ ராதிகாஸ் நகைமாளிகை

189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/ 1543)

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1540]

# வலி. வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்கா விட்டால் போராட்டத்திற்கு தயார்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களின் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான; சேனாதிராஜா சிவமகாராஜா, யாழ். மாநகர மேஜர் ரவிராஜ், வலிவடக்கு புனர்வாழ்வுக் கழகத் தலைவர் எஸ். பரமநாதன், மாவை ஆதீன முதல்வர், பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், வலி வடக்கு கிராம உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் முக்கியமாக அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆயிரம் வீட்டுத் திட்டம் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இது சம்பந்தமாக பல தீர்மானங்களும் அக்கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டுள்ளன. வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற நடவடிக்கை எடுத்தல். அங்கே ஏற்கனவே குடியேறியுள்ள மக்களுக்கு நீதியான நட்ட ஈட்டை வழங்குதல், குடியேறும் மக்களுக்கு தகுந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்தல்; அரசு அறிவித்துள்ள 1000 வீட்டுத்திட்டத்தை அவர்களுடைய சொந்த இடத்தில் கட்டிக் கொடுத்தல் ஆகிய தீர்மானங்களை நேற்றுக் கூடிய வலி. வடக்கு மக்களுடைய பொதுக் குழு ஜனாதிபதிக்கு அனுப்பவிருக்கும் மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் சம்பந்தமாக நியாயமான தீர்வு கிடைக்காவிடில் ஜனநாயக நீதியான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக ''நடவடிக்கைக் குழு'' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர வலி. வடக்கு மக்களுடைய சமய, பாடசாலை, தொழில், பொதுவான பிரச்சினைகள் பற்றியும் அக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

(க2-10)

## வெடி மருந்து மீட்பு

(வவுனியா)

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, பத்தரைக் கிலோ எடையுள்ள வெடி மருந்துப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இத்தேடுதல் நடவடிக்கையில வவுனியா மற்றும் கல்கிசைப் பொலிஸார் இணைந்து ஈடுபட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட வெடி பொருட்கள் கொழும்புக்கு கொண்டு செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ—5)

## வன்னிக்கு எரிபொருள்

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளின் ஜெனரேட்டர்களினதும், வாகனங்களினதும் பாவனைக்கு என பதினெட்டுப் பீப்பா மண்ணெண்ணெயும் டீசலும் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ் எரிபொருள் யூ. என். எச். சி. ஆர். வாகனத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. செ

## இயங்காதச.சநிலையம்

நாரந்தனை மத்தியில் இரு சனமூகநிலையங்கள் இயங்காத நிலையில் உள்ளது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம், சென் பீற்றர்ஸ் சனசமூக நிலையம் ஆகிய இரண்டும் செயற்பாடு எதுவுமில்லாத நிலையில் உள்ளன. (க-75)

# உயர்தர பாடம் ஆங்கில மொழியில்

## மே முதல் நடைமுறை

(கொழும்பு)

கல்விப் பொது தராதர உயர் தர பாடநெறிகளை, ஆங்கில மொழியில் போதிப்பதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசாங்கப் பாடசாலைகளில் எதிர்வரும் மே மாதமளவில் ஆங்கில மொழி மூலப் போதனையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாணவர்களிடையே போதனை மொழி மூலம் பற்றிய ஆய்வு ஒன்றின் பிரகாரம் 25 சதவீதமான மாணவர்கள் ஆங்கிலக் கல்வியை விரும்புவது தெரிய வந்துள்ளது. (இ-5)

## நுகேகொட இராணுவ முகாமில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு நுகேகொட இராணுவமுகாமில் இடம் பெற்ற தீவிபத்து சேதம் எதுவும் இன்றி உடனடியாக அணைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

நேற்று இரவு எட்டுமணியளவில் பாண்போடும் பேக்கரி ஒன்றில் ஏற்பட்ட தீ இராணுவமுகாமிற்கும் பரவியதாகவும், தீயணைக்கும் படையினர் விரைந்து செயற்பட்டதால் தீபரவாமல் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ

# இந்திய தூதுவருடன் கூட்டணி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தியை தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ். சிவமகாராசா, யாழ்நகர மேயர் என். ரவிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனார்.

இச்சந்திப்பின் போது யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலவரம், மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி தூதுவரிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது: (வ)

## சு.க. மாநாட்டில் பா. ஜ. பிரதிநிதிகள்

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 வது சம்மேளன மகாநாட்டில் இந்திய பாரதிய ஜனதாக்கட்சி, மற்றும் இந்திரா காங்கிரஸ் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (வ)

## சமாதானத்தை

நேற்று நடைபெற்ற இம்மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்:

மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி நாட்டின் சுபீட்சத்திற்காக எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் மேற் கொள்ளத் தயார்.

அரசாங்கத்தை வீழ்த்தும் சதிவேலைகளை நமது அரசியல் எதிரிகள் மேற்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்துள்ள அரசாங்கத்தை எந்த ஒருசக்தியாலும் கவிழ்க்க முடியாது.

யுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது: எனவே வருட இறுதிக்குள் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கையெடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார் (ந—4)

## மண்ணையும் - - -

இந்தநாட்டு மண்ணையும், மக்களையும் நம்பியே போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். அப் போராட்டம் இப்போது வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்றும் அவர்மேலும்கூறினார். (ம)

## அமெரிக்க. - - -

அமெரிக்க உயர் ஸ்தானிகர் அஸ்லிவில்ஸ் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக யாழ் வரும்இவர் அரசஅதிபர் கே.சண்முகநாதனைச் சந்திப்பதுடன் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் விஜயம் செய்வார். [இ-5]

## புலிகளை---

கும் வேளையிலும் எரிக்சோல் ஹெய்மின் வருகை முன்னைய வருகையிலும் பார்க்க முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 13வது தேசிய மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நோர்வேயின் விசேட தூதுவர் ''முக்கிய குறிக்கோள்'' ஒன்றுடன் கொழும்பு வந்திருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வேயின் தூதுவர் கொழும்பு வந்த கையோடு வெளி நாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் பேசிய போதும் அது பற்றிய விபரங்கள்எதுவும்வெளியிடப்படாத நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவை நேற்றிரவு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பின் போது புரிந்துணர்வு உடன்படிக்கை, பேச்சுவார்த்தைக்கானகாலம் இடம் என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை லண்டன் திரும்பவுள்ள தூதுவர்எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரம சிங்காவையும் இன்று சந்தித்துப் பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

லண்டன்திரும்பும் தூதுவர் உடனடியாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தை சந்தித்து தனது கொழும்பு விஜயத்தில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக எடுத்துக் கூறுவார் என்றும் அதன் பின் மீண்டும் கொழும்பு வருவார் என்றும் நோர்வே தூதரகவட்டாரங்களை மேற்கோள்காட்டிஅரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்முடன் மூன்று சிரேஷ்ட அதிகாரிகளும் வத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (வ)

# மரண அறிவித்தல்கள்

## முதலி பரமு

(நிற்சாமம், சங்கானை)

நிற்சாமம், சங்கானையை வசிப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட திரு முதலி பரமு அவர்கள் 04-03-2001 அன்று அகால மரணம் அடைந்து விட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகேந்திரராசா, புஸ்பலதா, சதீஸ்குமார் (லண்டன்), நேசமலர், திலகேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வீரசிங்கம் (கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும், மதுசாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04-03-2001 மாலை 5-00 மணியளவில் நடைபெற்றன:

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;

நிற்சாமம், சங்கானை;

ப. நாகேந்திரராசா (அப்பு) (மகன்)

(கி-1562)

## திருமதி சரஸ்வதி வயிரமுத்து

நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வயிரமுத்து அவர்கள் 04-03-2001 காலமானார். அன்னார் முதலி வயிரமுத்துவின் அன்பு மனைவியும், புவனேந்திரராசா, பாஸ்கரன், (கொலன்ட்), பிரேமதாஸ், (ஆசிரியர், மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம், (பட்டப் படிப்புகள் கல்லூரி வணிகமாணி இறுதியாண்டு மாணவன்) பார்த்தீபன், அரியதாஸ் (கொழும்பு), பகீரதன் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி உயர்தர மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமர்நிதா, தணிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், கேன்சிகாவின் பாசமிகு அருமை பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-03-2001 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் விளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

நிற்சாமம், சங்கானை

குடும்பத்தினர்

(கி-1563)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.